# சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் லாபம் 49% உயர்வு

**சென்னை, அக். 30:** முருகப்பா குழுமத்தைச் சேர்ந்த சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் நிறுவனத்தின் இரண்டாம் காலாண்டு லாபம் 49.3 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: நடப்பு நிதியாண்டின் ஜூலை–செப்டம்பர் காலாண்டில் சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் நிறுவனத்தின் தனிப்பட்ட மொத்த வருவாய் ரூ.1,675.83 கோடியாக இருந்தது. கடந்த நிதியாண்டின் இதே கால அளவில் ஈட்டிய வருவாய் ரூ.1,350.31 கோடியுடன் ஒப்பிடுகையில் இது அதிகம். தனிப்பட்ட நிகர லாபம் ரூ.203.93 கோடியிலிருந்து 49.3 சதவீதம் உயர்ந்து ரூ.304.67 கோடியாக காணப்பட்டது. செப்டம்பர் 30–ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆறு மாத கால அளவில் நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.2,663.43 கோடியிலிருந்து அதிகரித்து ரூ.3,296.30 கோடியாகவும், நிகர லாபம் ரூ.413.61 கோடியிலிருந்து உயர்ந்து ரூ.589.91 கோடியாகவும் இருந்தன.

நடப்பாண்டு செப்டம்பர் 30 நிலவரப்படி நிறுவனம் நிர்வகித்து வரும் மொத்த சொத்து மதிப்பு ரூ.36,456 கோடியிலிருந்து வளர்ச்சி கண்டு ரூ.47,720 கோடியாகியுள்ளது என சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

Chola

CHOLAMANDALAM INVESTMENT AND FINANCE COMPANY LIMITED